செ.வெ.எண்.54/ஜூன் தேதி : 24.06.2016

**பத்திரிக்கைச் செய்தி**

# விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (24.06.2016) விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் மற்றும் விவசாயிகளுக்கான அரசு மானிய திட்ட விளக்க கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில் பயறு வகை பயிர்களின் உற்பத்தியினை உயர்த்திடும் நோக்கில் நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி முறையினை பரவலாக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1500 எக்டேரில் செயல்விளக்க திடல் அமைத்திட ஒரு எக்டேருக்கு ரூ. 2500/- மான்யம் வீதம் மொத்தம் ரூ. 37.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**இயந்திர முறையில் நெல் நாற்று நடவு செய்ய மான்யம் :-**

நெல் சாகுபடி பரப்பினை அதிகப்படுத்த மற்றும் கூலியாட்கள் பற்றாக்குறையினால் இயந்திர நெல் நடவு முறையினை பரவலாக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 600 எக்டேர் பரப்பில் இயந்திர நெல் நடவு செயல்விளக்கத் திடல் அமைக்கும் பொருட்டு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 5000/- வீதம் மொத்தம் ரூ. 30 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது.

**திரவ உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் விநியோக மான்யம் :-**

வேதியியல் உரங்களை நிலங்களில் அதிகம் இடுவதை குறைத்து மண்வளர்தினை பாதுகாக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் திரவ உயிர் உரங்களை 50% மான்யத்தில் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ. 4.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதே போன்று பயிர்களில் ஏற்படும் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையினை போக்கி அதிக உற்பத்தியினை பெருக்கிடும் நோக்கில் 50% மான்ய விலையில் நுண்ணூட்ட சத்துக்களை விநியோகம் செய்யும் பொருட்டு ரூ. 5.0 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பருத்தி பயிரில் மகசூலினை உயர்த்திடும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் திரவ உயிர் உரங்கள் 50% மான்யத்தில் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ. 1.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும் பருத்தியில் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையினை களைந்திடும் பொருட்டு பருத்தி நுண்ணூட்ட சத்து 50% மான்யத்தில் விநியோகிக்கும் பொருட்டு ரூ. 4.50 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது.

**இலைவழி டி.ஏ.பி. உரம் தெளித்தல் :**

உர செலவினை குறைத்து பயறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெறும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 4000 எக்டேர் பரப்பில் இலைவழி டி.ஏ.பி. உரம் தெளிக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ. 650/- மான்யம் வீதம் மொத்தம் ரூ. 26.0 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது.

**சான்று பெற்ற விதைகள் விநியோக மான்யம் :-**

தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி உற்பத்தியினை பெருக்கிடும் நோக்கில் விதை கிராம திட்டத்தின்கீழ் சான்று பெற்ற நெல் விதை கிலோ ஒன்றுக்கு ரூ. 10/- மான்யம், சிறுதானிய சான்று பெற்ற விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 15/- மான்யம் மற்றும் பயிறு வகை சான்று பெற்ற விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 25/- மான்ய வீதம் விநியோகம் செய்யும் பொருட்டு மொத்தம் ரூ. 37.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**சிறுதானியங்கள் மற்றும் பயிறு வகை பயிர்களில் செயல்விளக்கத் திடல் அமைக்க மான்யம் :**

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் படி உணவு உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்தில் சிறுதானிய பயிர்களில் நவீன வேளாண் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இராகி பயிரில் 800 எக்டேரில் செயல்விளக்க திடல் அமைக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ. 4000/- மான்யம் வீதம் மொத்தம் ரூ. 32.0 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது. சாமை பயிரில் 500 எக்டேர் பரப்பில் செயல்விளக்கத் திடல் அமைக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ. 4000/- மான்யம் வீதம் மொத்தம் ரூ. 20.0 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது. அதேபோன்று மக்காச்சோளம் பயிரில் 500 எக்டேர் பரப்பில்

செயல் விளக்கத் திடல் அமைக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ. 4000/- மானியம் வீதம் மொத்தம் ரூ. 20.0 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது.

அதேபோன்று பயறு வகை பயிரில் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி துவரை பயிரில் 200 எக்டேரில் செயல்விளக்கத் திடல் அமைக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ. 5000/- மானியம் வீதம் மொத்தம் ரூ. 10.0 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**ஜிப்சம் மானிய விலையில் விநியோகம் :-**

பயறு வகை பயிர்களில் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 1800 எக்டேரில் ஜிப்சம் இடும் பொருட்டு ஒரு எக்டேருக்கு ரூ. 750/- மானியம் வீதம் மொத்தம் ரூ. 13.50 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது. அதேபோன்று எண்ணெய் வித்து பயிர்களில் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 300 எக்டேரில் ஜிப்சம் இடும் பொருட்டு ஒரு எக்டேருக்கு ரூ. 750/- மானியம் வீதம் மொத்தம் ரூ.2.25 இலட்சம் நிதி இலக்கு பெறப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்கள் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) திரு.கி. வெங்கடேசன், அவர்கள் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னதாக வேளாண்மைத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் நெல் நுண்ணூட்ட சத்துக்கள் அடங்கிய பையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், வேளாண்மை துணை இயக்குநர் திரு. பாஸ்கர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு. அண்ணாமலை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. சுசீலா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, பாலக்கோடு மற்றும் அரூர் சர்க்கரை ஆலை மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி. கவிதா, திருமதி. துர்காமூர்த்தி, கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் திரு. பாண்டியன், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.